சரிசெய்து தொழிற்பேட்டை அமைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு நிச்சயமாக செய்துதரும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள். மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

187—

தூண்டில் வளைவு

***9684—திரு. N. அசோக்குமார்:**

மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரம் மீன்பிடித் துறைமுகத்தில் தூண்டில் வளைவு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன், மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, சேதுபாவாசத்திரத்தில் தூண்டில் வளைவு அமைத்திடும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.

திரு. N. அசோக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதி நீண்ட கடற்கரையினைக் கொண்ட பகுதியாகும். இங்கு கடல் ஆழம் இல்லாததால் அதிக அளவில் ருசியான மீன்கள் கிடைக்கின்றன. கடல் சீற்றம் மற்றும் புயல் காலங்களின்போது கரையில் நிறுத்தப்பட்டுள்ள படகுகள் ஒன்றோடொன்று மோதி சேதம் அடைகின்றன.

2022 ஏப்ரல் 27]

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.*

திரு. N. அசோக்குமார்: *கஜா புயலின்போது சேதுபாவாசத்திரம் மற்றும் மல்லிப்பட்டினம் போன்ற கடல் பகுதிகளில் நிறுத்தப்பட்டிருந்த படகுகள் சேதமடைந்ததை நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது நேரில் வந்து பார்வையிட்டு, ஆறுதல் கூறினார்கள். சென்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் சேதுபாவாசத்திரம் கடற்கரைக்கு 10 கோடி ரூபாயில் மீன்பிடித் துறைமுகம் அறிவித்து,* tender *விடப்பட்டுள்ளது. இந்த சேதுபாவாசத்திரம் மற்றும் மல்லிப்பட்டினம் கடற்கரைக்கு தூண்டில் வளைவை, துறைமூலம் அமைத்துக் கொடுத்து மீனவர்களைக் காப்பாற்ற மறுபரிசீலனை செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி சேதுபாவாசத்திரத்தில் 55 விசைப் படகுகள் மற்றும் 100 நாட்டுப் படகுகளில் 500–க்கும் மேற்பட்ட மீனவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இந்தப் படகுகள் அனைத்தையும் கொண்டு, சேதுபாவாசத்திரத்தில் உள்ள ஒரு* T–jetty*–ஐத் தங்குதளமாகக் கொண்டு, மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த* T–jetty *2003 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது பழுதடைந்து விசைப் படகுகள் நிறுத்தும் பகுதியில் மணல் திட்டுகள் காணப்பட்டதால், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி சேதுபாவாசத்திரத்தில் மீன் இறங்குதளத்தினை ரூ.10 கோடி மதிப்பில் தரம் உயர்த்த அரசாணை எண் 318, கால்நடை பராமரிப்பு, மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை, நாள் 13–12–2021–ல் ஆணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் துவக்கப்படும் நிலையில் உள்ளன. சேதுபாவாசத்திரம் மீன் இறங்குதளத்தில் 110 மீட்டர் நீளம் படகு அணையும் சுவர், 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி, 165 மீட்டர் நீளம், 6 மீட்டர் அகலத்தில்* concrete *சாலை, 3*

மீட்டர் ஆழத்திற்கு தூர்வாரும் பணி, 2 புதிய கழிப்பறைகள் மற்றும் பழைய T–jetty–யினை புனரமைப்பு செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகள் முடியும்போது, சேதுபாவாசத்திரத்தில் உள்ள மீன் இறங்குதளத்தில் உள்ள 55 விசைப் படகுகளும், 100 நாட்டுப் படகுகளும் பாதுகாப்பாக மீன்பிடித் தொழில் செய்யவும், மீன்களைச் சுகாதாரமாக கையாளவும் வழிவகை ஏற்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. N. அசோக்குமார் அவர்கள்.*

திரு. N. அசோக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேராவூரணி தொகுதியில் உள்ள அம்மனிசத்திரம் கடற்கரைப் பகுதியில் ஆற்று முகத்துவாரத்தில் நாட்டுப் படகுகளை நிறுத்துவதற்கு தூண்டில் வளைவு துறைமுகம் அமைத்துத் தரப்படுமா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன்வளம்–மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. அனிதா R. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் மற்றும் மல்லிப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டம், கோட்டைப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், குந்துகால் போன்ற பகுதிகளில் மீன்பிடிப் படகுகளைப் பாதுகாப்பாக நிறுத்துவதற்காக T–jetty போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. T–jetty–யில் கடல் அலை தடுப்புச் சுவர் இல்லாத காரணத்தால், அங்கு நிறுத்தப்படும் படகுகள், புயல் மற்றும் பெருமழைக் காலங்களில் பெரும் சேதமடைகின்றன. இந்த சேதத்தைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவுப்படி T–jetty அமைந்துள்ள இடங்களில் கடல் அலை தடுப்புச் சுவர் அமைப்பதற்கு ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. அந்தவகையில் இந்த ஆண்டு தஞ்சாவூர் மாவட்டம், மல்லிப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் மாவட்டம், மூக்கையூர் ஆகிய மீன் இறங்குதளங்களில் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன. தேவைப்படும்பட்சத்தில், தஞ்சாவூர் மாவட்டம், சேதுபாவாசத்திரம் மீன் இறங்குதளத்தில் கடல் அலை தடுப்புச் சுவர் அமைப்பதற்கு மாண்புமிகு*

2022 ஏப்ரல் 27]

தமிழக முதல்வர் அவர்களின் ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

188—

வனத் துறை சாலை

***263—திரு. A.K. செல்வராஜ்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தோலம்பாளையம் முதல் கோபனாரி வரையுள்ள சாலையில் வனத் துறை பகுதிச் சாலையை ஊரக வளர்ச்சித் துறையிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை ஊராட்சி ஒன்றியம், தோலம்பாளையம் முதல் கோபனாரி வரை உள்ள சாலையில் வனத் துறைக்குச் சொந்தமான வனச் சாலையை ஊராட்சித் துறைக்கு ஒதுக்கீடு செய்வது குறித்து வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன்படி, உரிய கருத்துருவை பயனாளித் துறையான காரமடை ஊராட்சி ஒன்றிய B.D.O. அனைத்து விவரங்களுடன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்தால், பின்னர் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. A.K. செல்வராஜ் அவர்கள்.*

திரு. A.K. செல்வராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு என்னுடைய வணக்கத்தை நான்*